தொகுதி- ருஅ :: பகுதி- ரு — Vol. 58 :: No. 5

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1993
சுபகிருது—ஆவணி
AGU—1962

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 21—10—62)

உள்ளுரை

1. துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள்
ஆ. சிவலிங்கனுர், மயிலம் 130

2. கொலைக்களக்காதையின்
முன் அடைக்கலகாதை வைக்கப்பட்டது ஏன்?
புலவர் மு உலகநாதன் 142

3. திருச்சுனைக் கல் வெட்டுக்கள்
கே ஜி கிருஷ்ணன் M A., B. T. Dip. Geo.
Dip. Anthrop 149

4. கோவை
திரு. மது. ச. விமலானந்தம், எம். ஏ. தஞ்சாவூர். 153

151

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L. C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர், திரு, மா. இராசமாணிக்கனுர் M. A. L. T. M. O. L. Ph D. சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வீ. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர் மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை.
செந்தமிழ்
தொகுதி ரு அ திருவள்ளுவர் ஆண்டு 1993 பகுதி ரு
சுபகிருது — ஆவணி
Vol 58 1962 AGU No. 5

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

துறைமங்கல சிவப்பிரகாச அடிகள்

வித்வான் ஆ. சிவலிங்கனுர் அவர்கள்
விரிவுரையாளர்,
தமிழ்க் கல்லூரி, மயிலம்.

சிவப்பிரகாச அடிகள் காலத்தினை வரையறுக்கச் சிறந்த சான்றுகள் இரண்டுண்டு. ஒன்று பிரபுலிங்க லீலை பாடிய காலம். மற்றொன்று அண்ணுமலை ரெட்டியார் வாழ்ந்த காலம்.

(1) பார்கெழு சகாத்த மூவைஞ்
ஞூற்றெழு பானுன் காவ
தாதிய கரநா மங்கொள்
ஆண்டுறு விடைஞா யிற்றில
சீர்கெழு மல்ல மன்றன்
திருவிளை யாடற் காதை
கார்கெழு மிடற்றெங் கோமான்
கருணைகொண் டியம்பி னனே.

இப்பாடலால் பிரபுலிங்க லீலையானது சகம் 1574-க்குச் சரியான கரவாண்டில் இயற்றப்பட்டு நிறைவேறியது என்பது பெறப்படும். அடிகள் 32 ஆண்டுகள் இருந்தார்கள் என்று வரலாறு கூறு கின்றது. பிரபுலிங்க லீலையைத் தமது பிற்காலத்தில் இயற்றினர்

ளாதலின் அதனையியற்றியபின் இரண்டாண்டுகள் கழித்து இறையடி யெய்தினார்கள் எனக்கொண்டால் அந்நாலைத் தமது 30 ஆம் ஆண்டில் இயற்றியிருக்கலாம் எனக்கொள்ளலாம். எனவே அடிகளின் காலம் சகம் 1544—1576. அதாவது கி.பி. 1622—1654 எனக்கொள்ளலாம்.

(2) அடிகளை ஆதரித்த பெரிய வள்ளல் அண்ணாமலை ரெட்டியார் என்பவராவர். அவர் திருவேங்கை நகரத்தில் இறைவனுக்குக் கோயில் கட்டி முடித்துக் கும்பாபிடேகம் செய்திருக்கின்றார்.

"வல்ல, கோலுக்குவல்ல அண்ணாமலையார் கட்டு
கோயில்" (திருவேங்கைக் கோவை. 121)

"வல்லகோ லண்ணா மலைவள்ளல்—மல்லலுறச்
சந்தி பொருத்தித் தகும்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழற் புதவணித்தா—முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயில்"
(திருவேங்கை யுலா. 65, 66)

என்ற நம் அடிகளின் வாக்காலேயே உணரலாம். இக்கோயிலை அண்ணாமலையாரின் தந்தையார் இலிங்கா ரெட்டியார் என்பவர் தொடங்கியதாகவும் கட்டி முடிப்பதற்குள் அவர் காலமாயினராகவும், பின்னரே அண்ணாமலை ரெட்டியார் கட்டி முடித்துக் குடநீராட்டும் நிகழ்த்தினாராகவும் வரலாறுண்டு. மயிலை மடாலயத்து வெளியீடாக வந்த "சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள்" என்ற நூலில் திருவேங்கை மான்மிய வரலாற்றிற் குறித்திருப்பதாவது:

"அண்ணாமலை ரெட்டியார்..................சாலிவாகன சகாப்தம் 1545-ம் ௵ ஆகிய உருத்திரோற்காரி-௵ வைகாசி மாசத்தில் பூர்வபக்ஷ துவாதசியும் அஸ்த நக்ஷத்திரமும் கூடிய குருவார சுப தினத்திலே ஆபதோத்தாரண சிவாச்சாரியார் குமாரர் மறை பொருந்த சிவாச்சாரியரால் விநாயகர் முதலிய சகல மூர்த்தங்

களுடன் பழமலை நாதரையும் பெரியநாயகி யம்மையாரையும் பிரதிஷ்டை செய்வித்துக் கும்பாபிஷேகமும நடத்துவித்துப் பின்னும் வேண்டிய பொருள் செலவிட்டு, மகாமண்டபம் நிருத்த மண்டபம் இரண்டு பிரகாரம் கோபுரம் திருமதில் திருக்குள முதலிய திருப்பணிகளைக் குறைவற இயற்றிக் கொண்டிருந்தனர்'' (பக். 4) என்பது.

இதன் அடிக் குறிப்பில், '' இது மேற்படி அண்ணாமலை ரெட்டியாரது சந்ததியாராய்த் தற்காலத்திலுள்ள சிவநேசம் மிக்க விருத்தாசல ரெட்டியார் முன்னிலையில் அத்தலத்திலுள்ள சிலாசாசனத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டது. ஆனால் அண்ணாமலை ரெட்டியாரே திருப்பணி முடித்துக் கும்பாபிஷேகம் நடத்துவித்திருக்கவும் அவர் பிதா நடத்துவித்ததாக அச்சாசனத்திலிருப்பது அவர் முதலில் திருப்பணி தொடங்கியமை நோக்கிக் குறித்திருக்கலாம்'' என்பதும் குறிக்கப்பட்டிருக்கின்றது.

குடநீராட்டு நிகழ்த்திய காலம் சகம் 1545-க்குச் சரியான உருத்திரோற்காரியமாகும். அதாவது கி. பி. 1623-ல் ஆகும். எனவே அடிகளின் குழந்தைப் பருவத்தில் குடநீராட்டு நிகழ்த்திருக்கின்றது என்பது தெரியலாம். அண்ணாமலை ரெட்டியாரின் பிற்காலத்திலேதான் நம் அடிகள் அவரை அடைந்திருக்கலாம். பிரபுலிங்க லீலை பாடிய ஆண்டு கர ஆண்டெனவே குடநீராட்டு நிகழ்ந்த ஆண்டின் 29-ம் ஆண்டில் அது பாடப்பட்டதென்பது பெறப்படும். அதாவது அடிகளின் 30-ம் வயதில் ஆகும். பின்னும் இரண்டொராண்டுகள் அடிகள் இருந்தனர் எனவே முன் குறித்தபடி அடிகளின் காலம் கி. பி. 1623—1654 என்று வரையறுக்கலாம்.

தங்காலப் புலவர்கள்:

அடிகள் இளவயதில் தமது தந்தையாரிடம் கல்வி பயின்றவர்கள். வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடம் இலக்கணம் பயில்வான் வேண்டிச் சென்ற காலத்துக்கு முன்னரே சோண சைலமாலை யியற்றியமை யானும், அவரிடம் சென்று '' குடக்கோடு வான் ''

என்ற வெண்பாவைப் பிழையற இயற்றியமை யானும் போதிய இலக்கணப் புலமை இளமையிலேயே திருவருட் பெருக்கால் வாய்க்கப்பெற்றிருந்தனர் என்பது போதரும். அப்புலமையும் தமது தந்தையாரிடமே பெற்றிருக்கலாம். அடிகளின் தந்தையார் ஒரு சிறந்த புலவர் என்பதை,

கயல் வாய்த்த கண்ணியுலகீன்ற வல்லிபங் காவுனது
செயல்வாய்த்த அன்பர்க்கும் அல்லாதவர்க்கும் சிரிப் பல்லவோ
இயல்வாய்த்த எந்தைக்கு யான்வாய்த் ததுமிங் கென்றனக்கு
வயல்வாய்த்த ததுமனை வாய்த்ததுமைந் தர்கள் வாய்த்ததுமே

என்ற அவரது பாடலால் உணரலாம். ஆகவே சிவப்பிரகாச அடிகளின் காலப் புலவர்களுள் முதற்கண் வைத்துக் கூறப்படுபவர் அவர் தந்தையாராகிய குமாரசாமி தேசிகர் ஆவர்.

(2) தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த திருநெல்வேலிச் சிந்துபூந் துறையில் இருந்த வெள்ளியம்பலவாணத் தம்பிரான்: இவர் இயற்றிய நூல்கள்: ஞானசம்பந்த தேசிகர் சமுகமாலை, தாலாட்டு, திருப்பள்ளி யெழுச்சி, முத்திநிச்சயச் சிற்றுரை, முத்திநிச்சயப் பேருரை, சிவஞானசித்தி, ஞானாபரண விளக்கம், மிருகேந்திரம்.

(3) கருணைப் பிரகாச அடிகள்: இவர் நம் அடிகளின் இளவல். இஷ்டலிங்க அகவல், சீகாளத்திப் புராணத்தில் இரண்டு சருக்கங்கள் இவரால் இயற்றப்பட்டன.

(4) வேலைய அடிகள்: இவரும் நம் அடிகளின் இளவல். இவர் இயற்றிய நூல்கள்: நல்லூர்த்தல புராணம், இஷ்டலிங்கக் கைத்தலமாலை, நமச்சிவாய லீலை, வீரசிங்காதன புராணம், கிருஷ்ண சரித்திர பாரிஜாத லீலை, மயிலத்திரட்டை மணிமாலை, சீகாளத்திப் புராணத்தில் இரண்டு சருக்கங்கள்.

(5) அடிகளால் திருச்செந்தூர் யமக அந்தாதி பாடி வென்றடக்கப்பட்ட புலவர். இவரைப்பற்றி ஒன்றும் தெரிந்திலது.

(6) சாந்தலிங்க அடிகள்: இவர் அடிகளைத் சிவத்திரு சிவஞான பாலய சுவாமிகளிடம் சேர்ந்தவர். இவரால் இயற்றப்பட்ட நூல்கள் வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வுந்தியார், கொலைமறுத்தல், நெஞ்சுவிடு தூது என்பன.

(7) திருக்காட்டுப் பள்ளியில் உப்புவிற்ற அம்மையார் ஒரு புலமையாளராக இருந்தார்,

(8) தத்துவ போதகர்: (Robert-De-Nobili) இவர் கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்கு வேண்டிய அளவில் தமிழில் நூல்களைக் கற்றாரேயன்றிச் சிறந்த புலமை வாய்க்கப் பெற்றவரில்லை எனினும் அக்காலத்தில் அறிஞர் கூட்டத்துள் ஒருவராக வைத்தெண்ணத் தககவராக இருந்தார் என்னலாம். இவர் இயற்றியனவாகச் செய்யுள் நூற்கள் காணப்படவில்லை. உரைநடையில் பல நூற்கள் இயற்றியிருப்பினும் அவைகளும் இப்போது கிடைப்பது அரிதாக உள்ளன. இவர் இயற்றிய உரைநடை நூல்களாகக் 'கிறித்தவமும் தமிழும்' என்ற நூலில் காணப்படுவன ஞானோபதேச காண்டாம், மந்திரமாலை' ஆத்தும நிர்ணயம், தூஷணதிக்காரம், பரமசூட்சுமாபிப்பிராயம், கடவுள் நிருணயம், புனர்ஜென்மம், ஆட்சேபம், நித்திய ஜீவன சல்லாபம், தத்துவக் கண்ணாடி, சேசுநாதர் சரித்திரம், தவசுச் சதகம், ஞானதீபிகை, நீதிச்சொல், அநித்யநித்ய வித்யாசம், பிரபஞ்ச விரோத வித்தியாசம், தமிழ் போர்ச்சுகீசு அகராதி என்பனவாகும்.

இவ்வெண்மரும் நம் அடிகளின் வரலாற்றொடு தொடர்புடையவர்கள். இனி வரலாற்றொடு தொடர்பில்லையென்றாலும் காலத்தொடு தொடர்புடைய புலவர்களைக் காண்பாம். திரு. சோமசுந்தர தேசிகர் அவர்கள் தமது 17-ம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரத்தில் குறித்திருக்கும் பெரும்பாலான புலவர்கள் நம் அடிகளின் காலத்தவராகக் காணப்படுகின்றனர். அவர்களைப் பற்றிச் சில

குறிப்புக்கள் காண்பது நன்று. அதனால் அடிகள் காலத்தில் எவ்வளவு சிறந்த புலவர்கள் இருந்தார்கள் என்பதும் வெளிவந்த நூல்களின் மிகுதிப்பாடு நமக்குப் புலப்படும்.

வயித்தியநாத தேசிகர்.

இவர் திருவாரூரில் சைவாசாரியர் மரபில் வந்த வன்மீகநாத தேசிகரின் முதல் மனைவியின் மகனார். இளமையில் தாயையிழந்து வருந்தியவர். அகோர முனிவரிடம் தென்மொழி வடமொழி பயின்றவர். கயத்தாற்றில இருந்து ஆட்சி புரிந்த திருவேங்கட நாதர் என்பவரால் போற்றப்பட்டவர். இவர் பொம்மபுரம் மூன்றாம பட்டத்துச் சிவஞான பாலய சுவாமிகளைக் கண்டு வணங்கிப் பாசவதைப் பரணி பாடியதாக வரலாறுண்டு. நம அடிகள் ஷை சிவஞான பாலய அடிகளால் நல்லாற்றூரில் நிலைத்திருக்கச் செய்யப் பெற்றவர் என்பது முன்னரேயே கூறப்பட்டது. ஆகவே அடிகள் நல்லாற்றூரில் இருந்தபோதோ அல்லது அடிகள் மறைந்த இரண்டோராண்டுகட்குப் பின்னரோ தேசிகர் பாசவதைப் பரணி பாடியிருக்க வேண்டும். இவர் இயற்றிய பிற நூல்கள்: இலக்கண விளக்கம், மயிலம் பிள்ளைத் தமிழ், திருவாரூர்ப் பன்மணிமாலை, நல்லூர்ப்புராணம், திருவாட்போக்கிப் புராணம், கமலாய அம்மைப் பிள்ளைத் தமிழ், மெய்ஞ்ஞான விளக்கம்.

திருப்பூவணம் கந்தசாமிப் புலவர்.

இவர் திருப்பூவணத்தில் இருந்த பொன்னனையாள் என்னும் தாசிக்குப் பிறந்தவர். புலமை யெய்திய பின்னர்ச் சிவகங்கை சமீன்தாரான முத்துவடுக துரையாலும், சீதக்காதியாலும் போற்றிப் புரக்கப்பட்டவர். இவர் திருப்பூவணப் புராணத்தைச் சகம் 1543-ல் இயற்றினார் எனத் தெரிகிறது. அதாவது கி.பி. 1621 ஆகும்.

“சந்தமுத் தமிழ்தேறும் கல்வித் தலைவர் மகிழ் உமறுப் புலவருடன்
செந்தமிழ்க் கந்தசாமிப் புலவனும சீராட்டெனத் தமிழ் பாராட்டவோ”

எனச் சீதக்காதி நொண்டி நாடகத்தில் காணப்படுதலின் கந்தசாமிப் புலவர் சீதக்காதியைப் பாடியிருப்பது புலப்படும். சீதக்காதியின் காலம் கி. பி. 1682 வரையாகும். எனவே நம் அடிகள் காலத்துக்கு முன்னரும் பின்னருமாக நீண்ட காலமாக வாழ்ந்தவர் புலவர் என்பது போதரும்.

பாலசுப்பிரமணியக் கவிராயர்.

இவர் பழநியில் தோன்றியவர். இளமையில் குருடும் செவிடுமாக இருந்து முருகனருளால் மீண்டும் பார்வையும் கேள்வியும் பெற்றவர். அக்காலத் தஞ்சையரசரால் கவியரசர் என்ற பட்டம் பெற்றவர். இவர் நூல்கள்: திராவிட வேத நிர்ணயம், பஞ்சரத்திரமதசபேடிகை, அக்கதிபிகை, சைவசித்தாந்த தரிசனம், வேதாந்த சித்தாந்த சமரச தீபம், மாயாவாத சகசிர தூஷணி, குகோத்கர்ஷம, கூவிளாநீப மகாத்மியம, பழநித்தல புராணம. பழநித்தல புராணத்தைச் சகம் 1550-க்குச் சரியான கி. பி. 1628-ல் பாடினார். எனவே நம் அடிகளின் அரும் வயதில் பாடியதாகக் கொள்ளலாம்.

மணவாளதாசர்.

இப்பெயர் கொண்டவர் நால்வர் எனக் குறிப்பிடுவர் திரு. சோமசுந்தர தேசிகர் அவர்கள். அவரது கொள்கைப்படி நம் அடிகள் காலத்தில் விளங்கியவர். சோழ நாட்டில் சீகாழிக்கடுத்த திருவாலித் திருநகரி என்ற ஊரில் தோன்றியவராம். இவர் திருமலை நாயக்கரிடம் காரிய நிர்வாகத்தராக அமர்ந்தவர். இவர் அரசவையில் விற்றிருந்த போது தமது மேல் ஆடையைக் கசக்கினாரெனறும், அதற்குக் காரணம் கேட்டபோது திருவரங்கத்தில் தேர்ச்சீலை பற்றி யெரிந்ததாக அதனை யவிக்கக் கசக்கியதாகக் கூறினார் என்றும் வரலாறு கூறுகின்றது. இறுதிக் காலத்தைத் திருவரங்கத்திலிருந்து கழித்தார். இவர் நூல்கள் அழகர் அந்தாதி, திருவரங்கத்து மாலை என்பனவாம்.

அந்தகக் கவி வீரராக முதலியார்.

தொண்டை நாட்டில் திருக்கழுக்குன்றத்துக்குப் பக்கத்திலுள்ள உழலூரில் வடுகநாத முதலியார் மகனாகத் தோன்றியவர். பிறவிக்

குருடர். காஞ்சீபுரம் கந்த புராணமு கச்சியப்பரிடம் புலமை பெற்ற வர். திருவாரூரில் வயித்தியநாத தேசிகரோடு அளவளாவியவர், தருமபுரத்தில் எட்டாம்பட்டம் அழகிய திருச்சிற்றம்பல தேசிகரைக் கண்டு பஞ்சரத்தினம் பாடித் துதித்தவர். இவர் செய்த வியத்தகு செயல்கள பல. சீட்டுக் கவி பாடுவதில் வல்லவர். இவர் நூல் களாவன திருக்கழுக்குன்றப் புராணம், திருக்கழுக்குன்ற உலா, திருவாரூர் உலா, கீழ்வேளூர் உலா, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேயூர்க் கலம்பகம், விட்டினர் அம்மையப்பன் பிள்ளைத் தமிழ், பரார் சசிங்கன் வண்ணம், கயத்தாற்றரசன் உலா, சந்திரவாணன் கோவை, பஞ்சரத்தினம் என்பன. தருமையாதீனம் எட்டாம் பட்டத்து அடிகள் காலம் கி. பி. 1650. எனவே நம் அடிகள் காலத்தவர் முதலியார் என்க.

தமிழாகர முனிவர்.

இவர் திருநெல்வேலியில் தோன்றியவர். சிதம்பரம் குகை மடத்தைச் சார்ந்த ஞானப்பிரகாசரிடம் ஞான உபதேசம பெற்றவர். பிற்காலத்தில் தருமையாதீன ஆறும் பட்டத்து அடிகளிடம் தீக்கை பெற்றவர். நீதிசாரம், ஆசௌசதீபிகை, பிராயச்சித்த சமுச்சயம், ஞானசம்பந்த குருராய வட்டகம், சந்திரகலாமாலை என்பன இவர நூல்கள்.

சம்பந்த சரணாலயர்.

தருமையாதீனத்து ஆறும்பட்டத்து அடிகளிடம் மாணவராய் இருந்தவர். வெள்ளியம்பலவாணத் தம்பிரானிடமும் மாணவ ராய் இருந்திருக்கின்றார். மைசூர் அரசன் வேண்டுகோட்கிணங்கக் கந்த புராணச் சுருக்கம் இயற்றினர். சிகாரத்தினமாலை என்பது இவர் இயற்றவேறு நூலாகும்.

அழகிய சிற்றம்பலக் கவிராயர்,

தொண்டை நாட்டில் மாமல்லபுரத்தில் தோன்றியவர். மதுரைத் திருமலை நாயக்கரின் கீழிருந்த வெங்களப்ப நாயக்கர்மீது குறவஞ்சி

யியற்றிய அவரால் மிதிலைப்பட்டி என்ற ஊரைப் பெற்றவர். பெற்றது சகம் 1570 (கி.பி. 1648). இதனால் மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்று கூறப்பட்டவர். இராமநாதபுரத்தில் தளவாய் விசயரகுநாத சேதுபதியான திருமலை சேதுபதியின்மீது தளசிங்கமாலை யியற்றிச் சன்மானம் பெற்றவர்.

வென்றிமாலைக் கவிராயர்.

இவர் திருச்செந்தூர் முக்காணிமார் குடும்பத்தில் தோன்றியவர், இளமையில் ஒழுக்கம் இழந்தவர். திருச்செந்தூர்க் கோயிலில் மடைத் தொழில் புரிந்தவர். ஒருகால் மடைத் தொழிலில் முட்டுப் பாடு உண்டாக அதனால் கசையடி கொடுக்கப்பட்டு அவ்வவமானம் தாங்காமல் கடலில் விழுந்தவர். முருகனருளால் கரையேறித் திருச் செந்தூர்ப் புராணம் பாடியவர். உலாந்தக்காரரால (Holland) கொண்டு போகப்பட்ட முருகன உருவத்தைக் காவை வடமலையப்ப பிள்ளையன் என்பார் நாராயண முதலியார் என்ற தமது கீழ் அதிகாரி யைக் கொண்டு இலங்கைக் காலி என்ற துறைமுகத்திலிருந்து மீட்டுவந்து நிறுத்திய செய்தியைக் கீர்த்தனமாகப் பாடியவர். கீர்த்தனம் பாடிய காலம் சகம் 1575. அதாவது கி. பி. 1653 ஆகும்.

பாகை அழகப்பன்.

சென்னைக் கோடம்பாக்கம் இவரது பிறப்பிடம் என்பர் சிலர். இவர் வடமலையப்ப பிள்ளையன்மீது வடமலை வெண்பா பாடியவர்.

நாராயண தீட்சிதர்.

தென்திருப்பேரையில் தோன்றியவர் இவர். வைணவர் தமது நிலவருமானத்தைக் கொண்டு வாழ்ந்தவர். இவர் தீர்வை செலுத்தாத காரணத்தால் திருமலை நாயக்கர் ஆணைப்படி வடமலை யப்பபிள்ளையன் கீழ் அதிகாரியால் சிறைவைக்கப்பட்டவர். சிறை யிலிருந்தபடியே துக்கத்தைக் குறித்து மகரநெடுங்குழைக் காதர் பாமாலை பாடி வருகையில் வடமலையப்ப பிள்ளையனால் சிறை நீக்கப் பட்டவர்.

திருமேனிக் கவிராயர்.

தென் திருப் பேரையூரினா. காரிரத்னக் கவிரா்யர் பிள்ளை, தென்திருப்பேரைத திருப்பதியில் நடந்த திருப்பணிகளைச் சுட்டித் திருப்பணிமாலை பாடியவர். அம்மாலையில் திருமலை நாயக்கரையும் வடமலையப்ப பிள்ளையனையும் குறிப்பிட்டிருக்கின்றுர்.

பரராச சிங்கன்.

இவர் யாழ்ப்பாணத் தரசர். அந்தகக் கவி வீரராக முதலியாரைப் போற்றியவர். அவர் தம்மீது பரராச வண்ணம் பாடியதைக் கேட்டு,

விரகன் முத்தமிழ்க் கவிவீர ராகவன்
வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்
உரகனும் வாணனும் ஒப்பத் தோன்றினுல்
சிரகர கம்பிதம் செய்ய லாகுமே

என்று பாடியவர்.

இதுகாறும் கூறப்பட்ட புலவர் யாவரும் நம் அடிகள் காலத்தவர்களாக இருந்தும் ஒருவருக் கொருவர் தொடர்புடையவர்களாக விளங்கவில்லை. இக்காலம்போல் போக்குவரவு வசதிகள் இல்லாமையே காரணமாம். ஏட்டுச் சுவடிக்காலம் ஆனமையால் ஒருவா நூல் மற்றொருவருக்குத் தெரியவும் வழியில்லை.

புலவர்கள்.

நம் அடிகளாரைப் போற்றிய புரவலர்கள் இருவர். ஒருவர் மிகச் சிறந்த நண்பர் அண்ணாமலை ரெட்டியார் என்பவர். இவரைப்பற்றி

அடிகள் நன்றியறிதலாகப் பாடியமை பிறிதோர் இடத்தில் குறித்துள்ளோம்.

இரண்டாமவர் சிதம்பர பூபதி என்பவர். இவர் சிவஞான பாலய சுவாமிகள்பால் திருவருள் பெற்றுத் தமது பகையை வென்ற குறுநிலமன்னர் அடிகளுக்காகத் திருமுது குன்றத்தில் மடம் கட்டுவித்தார்.

அடிகள் வரலாற்றொடு தொடர்பில்லாப் புரவலர்கள் பலர் இருந்தனர். அவர்கள் மேற்குறித்த புலவர்களை யாதரித்த பெரியவர்களாவர்.

கொலைக்களக் காதையின் முன் அடைக்கலக் காதை வைக்கப்பட்டது ஏன்?

மு. உலகநாதன்,
விரிவுரையாளர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன். கோவலனை முதன் முதலில் நாம் எங்கே சந்திக்கிறோம்? இளங்கோவடிகள் நம்மை எங்கே சந்திக்க வைக்கிறார்? சிலம்பு புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக காண்டம் என்று முடிவு பெறுகிறது. இக்காண்டங்களில் கோவலனைப் பற்றிய குறிப்புக்கள் எங்கெங்கே காணப்படுகிறது? எவ்வாறு காணப்படுகிறது? அதற்கும் கதைக்கும் தொடர்பு உண்டா?

சிலம்பின் முதற் காதை மங்கலத்தோடு மங்கல வாழ்த்துப் பாடலாக முகிழ்க்கிறது. திங்களையும் ஞாயிற்றையும் வாழ்த்திய இளங்கோ பதியெழு வறியாப் பழங்குடியாகிய மாநாய்கனையும், மாசாத்துவானையும் காட்டி அவர்கள் பெற்ற செல்வங்களான கண்ணகியையும் கோவலனையும் நமக்குக் காட்டுகின்றார்,

கோவலன் நம்மைச் சந்திக்கின்றான். எவ்வாறு? தோன்றிற் புகழோடு தோன்றுக என்றவாறு மண்ணின் புகழும் சிறுகும்படி தன புகழ் பெறுகுமாறு தோன்றுகின்றான். பண் போன்ற மொழியினையுடைய மதிமுக மடவார் அவனது அழகு நலம் கண்டு இவன் செவ்வேளோ என மயங்கி நலனழியுமாறு மிகுந்த அழகோடும் பொலிவோடும் பிறரை ஈர்க்கும் வகையிலே அறிமுகப்படுத்தப்படுகிறான். நமது உள்ளமும் அவனது உருவ அழகினைப் பலவாறாக

எண்ணி மயங்குகிறது. கற்பனை செய்து மகிழ்கிறது. இளங்கோ வடிகள் முதற் காதையிலேயே கோவலனை இவ்வாறு நம் முன் படம் பிடித்துக் காட்டுகிறார்.

கோவலனைப பற்றி ஒரு உயர்ந்த எண்ணம் நம் மனத்தில் தோன்றுகிறது. முதலில் இவ்வாறு தோனறிய எண்ணம் பின் கதைப் போக்கில் எவ்வாறு செல்கிறது? கோவலனைப் பற்றி என்ன எண்ணுகிறது? இதனை ஆராய்கின்றபோது அவனது போக்கும் செயலும் அவனைப் பற்றித தவருக எண்ணுவதற்கே இடம் தருகிறது. முதன் முதலிலே அவன் மீது வைத்த அன்பும் விருப்பும் கூட அவன் கண்ணகியைத் துறந்து மாதவிபால் சென்றபோது ஏற்படவில்லை. அது அவனைச் சிறந்த 'கலை விருபபி' என்றும் எனவேதான் அவன கண்ணகியைத் துறந்து மாதவிபால் சென்ருன் எனறும எண்ணத் தூணடுகிறது.

நகர நம்பியர் திரிதரு தெருவிலே கோவலனும் சுற்றுகிருன். அங்கிருந்தவாறே கூனியின் கை மாலையை வாங்கி மாதவியின மணமனை புகுந்து அவளது அணைப்பினில் மயங்கி அவளை விடுதல் அறியாத விருப்பினுலே கண்ணகியை மறக்கிருன்.

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! என்று கண்ணகி யோடு மனையறம் படுத்த காதையிலே தாரும் மாலையும் மயங்க இன்பம் துய்த்தவன் அவளைப் பிரிந்து மாதவியோடு வாழ்கிருன். பின்பு கானல் வரியிலே மாதவி பாடிய வரிப்பாடலால் கருதது வேறுபாடு கொண்டு அவளைப பிரிந்து மீண்டும் கண்ணகியை அடைகிருன். தன் செயலுக்கு வருந்துகிருன். மாதவியைப் பரத்தை என இகழ்கிருன். இழந்த செல்வத்தை மீண்டும் பெற மதுரை செலல வேண்டும் என்று கூறுகிருன். இந்நிகழ்ச்சிகள் எல்லாம் கண்ணகியைப் பிரிந்த ஆண்டு சிலவற்றில் நிகழ்ந்து முடிந்துவிட்ட செய்திகளாகும்.

காப்பியத் தலைவன் என்று சொல்லுகின்றபோது அவனது கொடை, வீரம், காதல், அன்பு, அருள் முதலியவைகள் பேசப்பட

வேண்டும் என்பது பாடாண் திணை கூறும் இலக்கணமாகும். இதன் படி பார்த்தால் கோவலன் ஒரு முழு காப்பியத் தலைவனாகத் தோன்ற வில்லை.

அப்படியானால் சிலம்பு ஒரு முழுக் காப்பியத் தலைவன் இல்லாத காப்பியமா? அப்படிச் சொல்வதற்கு இல்லை. அடைக்கலக் காதையில் கோவலனது சிறப்புக்கள் மேலும் சில செய்திகளால் சொல்லப் படுகிறது. புகார்க் காண்டம் முழுவதும் கோவலனது சிறப்புக்கள் வெகுவாகச் சொல்லப்படாமல் ஏன் அச்செய்திகளை மதுரைக் காண்டத்தின் அடைக்கலக் காதையிலே சொல்ல வேண்டும்?

இளங்கோவடிகள் செய்தியைச் சொல்ல வேண்டிய இடத்தை விட்டு பிறழச் சொன்னாரா? மயங்கிக் கூறினாரா? இல்லை தெளிந்து தெரிந்துதான் எழுதினாரா? என்ற கேள்விகள் எழுகின்றன. இளங் கோவடிகள் மயங்கினார் என்று எழுகின்ற மயக்கம் நம்முடைய மயக்கமே அன்றி வேறில்லை.

அடைக்கலக் காதையில் 'கருணை மறவன' என்றும் 'செல்லாச் செல்வன்' என்றும் 'இல்லோர் செம்மல்' என்றும் கோவலன் புகழ்ந்து கூறப்படுகிறான்.

குமரியிலே நீராடிவிட்டுத் தன் சுற்றம் நோக்கி ஊர் திரும்பு கின்றான் மாடல மறையவன். அவன் வழியில் உள்ள கவுந்தியும் கோவலனும் தங்கி இருக்கின்ற தவப் பள்ளியிலே வழி நடந்து வந்த களைப்பால் தங்க நேரிடுகிறது. கோவலன மாடலனை வணங்கு கின்றான். அப்போது மாடலன் கோவலனது வீரம், கொடை, அருள் முதலியவற்றிற்குச் சான்றாகச் சில நிகழ்ச்சிகளைக் கூறுகின்றான்.

மாதவி மணிமேகலையைப் பெற்றெடுத்தாள். அம்மகிழ்ச்சியிலே திளைத்த அவ்விருவரும் மனமகிழ்ந்து பொன்னையும் பொருளையும் எல்லோருக்கும் வாரி வழங்குகின்றனர். அதனைப் பெறுவதற்காக ஒரு வயது முதிர்ந்த அந்தணன் வருகிறான்.

அப்போது மதம் பிடித்த அரச யானை கட்டவிழ்த்துக்கொண்டு ஓடி வருகிறது. யானையின் கையிலே சிக்கி இறக்கும் தருவாயில் அம்முதிய அந்தணன் அகப்பட்டுக்கொள்கிறான். அக்காட்சியைக் கண்ட கோவலன் தான் விரைந்து அவனை விலக்கி யானையின் கோட்டிடை ஏறி முதுகில் அமர்ந்து அந்த யானையின் கொட்டத்தை அடக்குகிறான். யானையும் அடங்குகிறது. இதனை எண்ணிப் பார்க்கையில் கோவலனது துணிவும், அஞ்சாமையும், வீரமும் வெளிப்படுகிறது.

வேதப் பாரப்பனன் ஒருவன் தன் மனைவியோடு வாழ்கிறான். அவள் ஒரு கீறிப்பிள்ளையை வளர்க்கிறாள். ஒரு நாள் அவள் நீரெடுக்கச் சென்றபோது தொட்டிலில் கிடந்த குழந்தையை ஒரு நாகம் தீண்ட வருகிறது. அது கண்ட கீறி அந்நாகத்தைப் பாய்ந்து கடித்துக் கொன்றுவிட்டுக் கிணற்றடிக்கு வருகிறது. குருதி கொட்டும் அதன் வாயைக் கண்ட பார்ப்பினி அது தன் குழந்தையைத்தான் கடித்துவிட்டதோ என மயங்கி நீர்க்குடத்தை அதன்மீது போட்டுக் கொன்றுவிடுகிறாள். அது கண்ட அவள் கணவன் அப்பாபத்தைத் தொலைக்கக் காசியாத்திரை புறப்படுகிறான். அப்போது அவள் தன் வாழ்வின் எதிர்காலத்தைக் கூறி மன்றாடுகிறாள். அப்போது அவன் ஒரு நூல் எழுதி அவள் கையிலே கொடுத்து அதனைத் தக்கார் கையிலே கொடுப்பின் பொருள் கிட்டும் என்று கூறிச் செல்கிறான். அதனை அப்பார்ப்பினி கோவலனிடத்துக் கொடுக்கிறாள், அவன் பொருள் உணர்ந்த கோவலன் அவளுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்துக் காக்கிறான். எனவே அவன் 'செல்லாச் செல்வன்' என்று புகழ்ந்து பாராட்டப்படுகிறான். இங்கே கோவலனது அறிவும் கொடையும் வெளிப்படுகிறது.

கற்புடைப் பெண் ஒருத்தியின் மீது ஒருவன் அடாத பழியினைச் சுமத்துகிறான். இவ்வாறு பொய்க்கரி கூறியதனாலே அவனைச் சதுக்கப் பூதம் விழுங்க வருகிறது. அப்போது கோவலன் அப் பூதத்தைத் தன்னை அவனுக்குப் பதிலாக விழுங்கும்படியும் அவனை விட்டுவிடுமாறும் கேட்டுக்கொள்கிறான். ஆனால் அப்பூதம் குற்றம

செய்தோரையே விழுங்குவேன் என்று அவனை விழுங்கிவிடுகிறது. அதனால் வருத்தமுற்ற அவனது தாய்க்குத் தானே மகனாகியும் அவர்களது சுற்றம் மகிழப் பொருள் கொடுத்தும் அவர்களது துன்பத்தைத் துடைத்தான். இதனால் 'இல்லோர் செம்மல்' என்று புகழப்பட்டான். இங்கே கோவலனது அருள் உள்ளமும் பிற உயிர்களுக்காக வருந்துகின்ற மன நிலையும் புலப்படுகிறது.

காப்பியத் தலைவனான கோவலனது வீரம், கொடை, அருள் முதலியவைகளும் அதனோடு தொடர்புபட்ட பிறவும் அடைக்கலக் காதையில்தான நாம் மேலே கண்டவாறு தெரிந்துகொள்ள முடிகிறது. இக்கதை நிகழ்ச்சிகள் தேவைதானா? ஏன் இளங்கோ வடிகள் மாடலன் என்ற பாத்திரத்தின் மூலம இதனை அடைக்கலக் காதையிலே கூறவேண்டும்? சாதாரணமாக மேற்கண்ட கோவலனது பண்புகளைப் புகார்க் காண்டத்திலே ஆங்காங்கே கூறியிருக்கலாம் அல்லவா?

அவ்வாறு செய்யாமல் ஒருசேர அம்மூன்று நிகழ்ச்சிகளையும் மதுரைக் காண்டத்தில் கூறுவானேன்? அதுவும அடைக்கலக் காதையில் கூறுவதன் உள் நோக்கம எதுவாக இருக்க வேண்டும? கோவலன் பண்புகளைச் சொல்வதுதானே ஆசிரியரின கருத்து? அப்படியானால் முன் காண்டத்துக் காதைகளில் இதனைச் சொல்லாமல் மதுரைக் காண்டத்தில் அடைக்கலக் காதையில் சொல்வதில் ஏதோ பொருள் இருக்க வேண்டும். இளங்கோவடிகள் எதனையும் தெரிந்து தெளிகின்ற புலவரானபடியால் தக்க இடத்திலே தகுந்த சமயத்திலேதான் அதனைக் கூறுகின்றார். அது என்ன?

'அடைக்கலக் காதையின்' பின் வைக்கப்பட்ட காதை 'கொலைக்களக் காதை'. அதனில் கோவலன கொலையுண்ணப் போகிறான். கோவலன் கொலையுறுவானேல் அதன்பின் அவனது பெருமையினைச் சொல்வதில் பயனில்லை. இறந்த பின் சொல்வதைக் காட்டிலும் இருக்கும்போதே அவனது பெருமையினைச் சொல்ல வேண்டும் என்று இளங்கோவடிகள் எண்ணியிருக்க வேண்டும. மேலும் அத்தோடு கோவலனது ஆட்டபாட்டமெல்லாம் முடியப்

போகிறது என்பதையும் கண்ணகியின் வரலாறு அதிலிருந்துதான் துவங்கப் போகிறது என்பதையும் இளங்கோவடிகள் அறிந்தவர். கோவலனோடு வாழ்ந்த காலத்தும் உடன் வந்த காலத்தும் கோவலனது முழுப் பண்புகளையும் கண்ணகி அறிந்திருக்க முடியாது. ஒன்றாக இணைந்து வாழ்கின்ற காலத்திலேயே அறிய முடிவதில்லை எனகிறபோது நீண்ட காலம் பிரிந்திருந்த கண்ணகி எப்படிக் கோவலனை முழுதும் உணர்ந்திருக்க முடியும்? எனவே அறியாத மனைவிக்கு அவள் கணவனது பண்புகளை அறியச் செய்வதிலும் இளங்கோவடிகள் நாட்டம் கொணடிருக்க வேண்டும். அடுத்த காதையிலே அவன் மடியப் போகிறான். அவன் இறந்த பின்பா அவனோர் உத்தமன் என்று அவனைத் தன் மனைவிக்குக் காட்டுவது? காட்டுவது தவறாகாது எனினும் அவ்வாறு ஒரு காதைக்குப் பின்னர் சொல்லியிருப்பாரேயானாலும் பின்னால் வருகின்ற நிகழ்ச்சிகள் ஒன்றுகூட நடப்பதற்குச் சாத்தியமில்லை. பாண்டியன் அவையிலே அவள் நீதி கேட்கப் போவதும் இல்லை. மதுரை எரியுண்ணப் போவதும் இல்லை. மற்ற நிகழ்ச்சிகளும் இல்லை. எப்படி?

கோவலனோடு வாழ்வு நடத்தலாம், வழலாம் என்று வருகின்ற கண்ணகி முதல் முறையாகத் தன் கணவனது சிறப்பியல்புகளை அறிந்து கொள்வது அடைக்கலக் காதையில்தான். மாடலனது கூற்று அவள் உள்ளத்திலே மகிழ்ச்சிக்கு வித்திடுகிறது. தன் கணவனைப் பற்றி நல்ல முறையிலே கேட்ட கண்ணகி அடுத்த காதையிலேயே கள்வன் என்று குற்றம் சாற்றப்பட்டவுடன்தான் அவள் பொங்கி எழுகின்றாள். புகார்க்காண்டக் காதைகளில் இச் செய்தியை அவள் அறிந்திருந்தால் அவள் இத்தகைய கோபம் கொண்டு தன்னை வெறிப்படுத்திக் கொண்டிருப்பாளா என்றால் ஐயம்தான். எனவே கடைசிக் காலத்தில் கோவலனது சிறப்புக்களையெல்லாம் அறிந்தபோது அவன் கொல்லப்பட்டால் கண்ணகியின் வெறியும் பழிவாங்கும் எண்ணமும் உச்சநிலையடையத்தானே செய்யும்!

இளங்கோவடிகள் கண்ணகியை உலகுக்கு உணர்த்த விரும்புகிறார். அதற்குத் தக்க காலத்தையும் கோத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்து கோவலன் கொல்லப்படுவதற்கு முன் கோவலனது சிறப்பியல்புகளை எல்லாம் மாடலன் மூலம் அறியச் செய்து இயல்பாக உள்ள பெண் தன்மையை மேலும் தூண்டிவிட்டு அவளைக் கொற்றவைக் கோலம் கொண்டவள் என்று வாயில் காவலன் மூலம் சொல்லச் செய்கிறார்.

எனவேதான் அடைக்கலக் காதையைக் கொலைக்களக் காதையின் முன்வைத்துச் சொல்ல வேண்டிய செய்திகளை முறைபடச் சொல்லி சிலப்பதிகாரத்தை நடத்திச் செல்கிறார். இங்குச் சொல்லப்பட்ட கதைகளை வேறு எந்த இடத்தில் சொன்னாலும் காப்பியப் பண்பும் அமைப்பும் நடையும் குறையும் என்பதில் ஐயமில்லை. அதை உணர்ந்தேதான் அடைக்கலக் காதையைக் கொலைக்களக் காதையின் முன் இளங்கோ அடிகள் வைத்திருக்க வேண்டும்.

திருச்சுனைக் கல் வெட்டுக்கள்.

கே. ஜீ. கிருஷ்ணன் M. A., B- T. Dip. Geo , Dip. Anthrop.
கல்வெட்டு இலாகா, உதகை.

பாரதநாட்டின் பல பகுதிகளிலும் காணப்படும் கல்வெட்டுக்களைப் படியெடுத்து முறையாக அவற்றை ஆராய்ந்து 'தென்னிந்தியக்கல்வெட்டுக்கள்' 'எபிகிராபியா இந்திகா' என்ற புத்தகத் தொகுதிகளிலும் ஆண்டறிக்கையிலும் வெளியிட்டுவரும் அரும்பணியை மேற்கொண்டு ஒரு அலுவலகம மத்திய அரசாங்கத்தின் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின் அங்கமாக உதகமண்டலத்தில் இயங்கி வருகின்றது. முதலில் குறிப்பிட்ட 'தென்னிந்தியக் கல்வெட்டுக்கள' என்ற தொகுதிகளில் பதிமூன்று தொகுதிகள வெளியிடப்பட்டிருக்கின்றன சில முக்கியமான கல்வெட்டுகளின் மூலங்களையும் அவற்றைப்பற்றிய விரிவான குறிப்புக்களையும் தன்னகத்தே கொண்ட தாய் மூன்று மாதங்களுக்கு ஒரு பகுதியாகவும் இரண்டு ஆண்டுகளில் ஒரு தொகுதியாகவும் வெளிவருவது 'எபிகிராபியா இந்திகா' என்ற ஆராய்சி இதழாகும், இது ஆங்கிலத்தில் எழுதப்படுவது. ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டிலும் படியடுக்கப படும் கல்வெட்டுக்களின் செய்திகளை வரிசைப்படுத்தியும் முககிய கல்வெட்டுக்களின் செய்திகளைக்குறிபபாக எடுததுக்கூறியும் சில புகைப்படங்களையும் தன்னகத்தே கொண்டு வெளிவரும் ஒரு பிரசுரமாகும், பெரும்பாலான கல்வெட்டுங்கள் இன்னும வெளியிடப்படவில்லை. அவற்றையும் அச்சில் ஏற்றுவதற்கு வேண்டிய முயறசிகள நடந்து வருகின்றன. மேலே குறிப்பிட்ட'தெனனிந்தியக் கல்வெட்டுக்கள்' என்ற தொகுதிகளில் எட்டாவது தொகுதியில் 408 முதல் 418ம் எண் தாங்கிய பதினொரு கல்வெட்டுக்கள் திருச்சுனையில் கண்டு எடுக்கப்பட்டவை. திரு. மணவை. கா. மான அவர்கள 'தமிழர் வரலாற்றில் திருச்சுனை' என்ற சுவாச்சிகரமான தலைப்பில் செந்தமிழ் வைகாசி இதழில் அவ்வூர் அகத்தீசுவரர் கோயில் படிக்கட்டின் கீழ் பாறையில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல்வெட்டின்

மூலத்தினையும் குறிப்பிட்ட சில சொற்களின் பொருளையும் தந்திருக்கின்றார். அவர் தந்த மூலமும் பொருட்குறிப்பும் பிழைபடக்காணப்படுவதால் மேற்குறிப்பிட்ட தொகுதியில் 418ம் எண் தாங்கிய அக்கல்வெட்டின் மூலத்தை மீண்டும் அக்கல்வெட்டின்படியுடன் ஒப்பு நோக்கிக்கீழே தருகின்றோம்.

(பகரக்குறிகளில் அடங்கிய எழுத்துக்கள் தெளிவாக இல்லாதவை. நட்சத்திரக்குறியோடு உள்ளவை கல்லில் காணப்படாத எழுத்துக்கள். பட்டக்குறியில் உள்ளவை கல்லில் காணப்பட்ட, ஆனால் வேண்டாத எழுத்துக்கள்)

1. வத [11] திரிபுவனச்சக்கரவர்த்திகள் சிரிகுலே [சேகர] தெவ(ற்கு)இ-

1. யாண்டு பதின்மூன்ற(ா)வது துலாநாயற்று [வுூவ8] பக்ஷத்து அஷமி-

3. யும் வியாழக்கிழமையும் பெற்ற பூசத்து நாள் சுரநாட்டு [சுழிவ]ரகண்ட-

4. [னி]ல் வானிலார் ஊரா இசெந்த ஊரொம் சொழ மண்டலத்துச்சிபிராந்-

5. தகச் சதுப்பெதி மங்கலத்துக் கண்டேற்(ற)செ[ய]ச்சநாராயணபட்டந் அகத்தீசுர முடை[யர]

6. (செ)ற்கு நாங்கள் தன்மதானம் பண்ணிக்குடுத்த குடிக்காடாவது மாடெயன் ஏரி

7. மலை மேல்புறத்துப் ப[ட்ட]நெரி வாளிலார் தலையாலொரு குழி கல்வி வாளிலான் என்

8. று பெரிட்டுக் குடுத்த குடிக்காட்டுக்குப் செ[ப]ரு நான்கெல்லையாவது கிழ்பாற் செ

9. கல்லை மலைக்கு மெற்கும் தென்பாற்கெல்லை
திருவாழிக்கல்லுக்கு வடக்கும்

10. மெல்பாற்கெல்லை [தி] ருபாழிக்கல்லுக்கு கிழக்கும்
வடபா[ற்பெ]கல்லை திருவாழி-

11. க்கல்லுக்கு தெற்கும் யிது [க்]குள்ளு முற்றும் யிதில்
நஞ செ [ய்] க்கு மாத்தால் ஐங்

12. கல நெல்லு (க்கு) கடமையும் அந்தராயம் மாத்தால்
ஒரு திரமம் குறு வெ யிதி

13. ல் பாதியும் திணை வரகு நான்கொன்றும் எள்ளு
மாத்தால் ஒரு திரமமாக (இ) வந்-

14. த(க்) கடமெ யிக்கொயிலில் எம்பெருமாளு-

15. க்கு குடுத்தொம் யி வாளிலாரொம் [1]

16. ...க்கு ஒன்ஞயம் பண்ணுவான் கெங்(00)
எகெ[க்க]ரையி-

17. லெ கொன்ன தொஷத்தில் பொகவும் [11]

இக்கல்வெட்டினையும் அக்கோயிலின மண்டபத்தில் வடக்குச் சுவரில பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும் ஒப்பிட்டுப் பார்கக வேணடியது இன றியமையாதது. மேறகுறிக்கப்பட்ட தொகுதிகளில் 41்ம எணணுகத்தரப்பட்ட அதன மூலத்தையும தருகினறோம.

416

1. வத [11] [திரிபுவனச்சக்கரவர்த்திகள்] ஸ்ரீ சுந்தரபாண்டிய
தெவற்கு யாண்டு நாலாவது சொழமண்டலத்து [சிபராந்]
தகச்சது வெ — தி மங்கலத்து ... .

2. ச நாராயணபட்ட[ற்]க்கு முன்பு குலசெகர தெவற்கு பதின் மூன்றாவது [நாளி]லெ நம் மடியார் சுர நாட்டுச் சுழிவரகண்டன் வாளிலார் ஊராய் கூடி யிந்நாட்டுடைய—

3. னெரி ம[லை] மெல்புறத்திலெ ஊராய்க் கல்லி ஆ[க்கி] யிப்பட்டற்கு தன்மதானம் பண்ணிக்குடுத்து [யிதி]ல் கடமை]அ] ந்த ராயம் [நீ]ங்கல[ாக] சுலகல்லுநாட்டி வங்கார—

4. [த்தில் அகத்தி]சுர முடையார்[கொயிலி]ல்ள ்பெருமானுக்கு குடுத்து யிப்படி நாலாவது வரை......திங்கட்கிழமையும் பெ[ற்ற] உத்திராடத்து [னாள்] விக்கி -

5. ....நாராயணபட்டற்கு நம் மடியார் குடுத்தபடியெ நானுந் தன் [ம தானம] பண்ணிக்குடுத்தென் அழ[கி]... பதி வெ (ா) ளா—

6. னென் [1] யிப்படி கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்வதாகச் சொன்னென் துவராபதி வெளானென் [1] யி ....[நா]ட்டின் கட[மை]

7. அந்தராயம் [நீ]ங்கலா [க] தெவநலலூர் படியிலும் [ம்] சொலலிக் குடுத்தென் துவர்ாபதி வெளானெ[ன்] [11]

இந்த இரண்டு கல்வெட்டுக்கள் நீங்கலாக வேறு ஒன்பது கல்வெட்டுக்கள் அக்கோயிலில் காணப்பட்டன. பதினொரு கல்வெட்டுக்களையும் ஒரு சேரப்படித்து ஆராய்ந்து பார்த்தால் மேழ்க் கண்ட சில செய்திகள் புலப்படுகின்றன.

1. இவ்வூரின் பெயர் இன்று திருச்சுனை யென்று வழக்காற்றில் காணப்படுகின்றது. கல்வெட்டுக்களின் துணை கொண்டு கண்டால பெரும்பாலும் சுழிவரகண்டன என்று காணப்படுகின்றது. இப்பெயர் தானும் சூழும் அரசர் கண்டன் என்று முதலில் இருந்திருக்க வேண்டும் என்று உய்த்துணர இடமுண்டு. ஆனல் அரசர் கண்டன

என்ற பெயர் கி. பி. 1250 இல் ஆட்சி எய்திய முதலாவது சடைய வர்மன் சுந்தரபாண்டியனின் 14 வது ஆட்சி ஆண்டைச்சார்ந்த கல்வெட்டில் (எண் 411, வரி 3, 18) கொடுக்கப்பட்டிருக்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன், தன்னைச்சூழ்ந்த அரசர்களிலும் மிகுந்த வீரமுடைய ஒரு பெருமகனின் பெயரால் இவ்வூர் அமைந்து இன்று திருச்சுனை என்று மருவி நிற்பது தெள்ளிது. இவ்வூரும் அண்மையிலுள்ள வேறு ஊர்களும் சுரநாட்டில் அடங்கியிருந்ததாக இக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. சுரநாடு சுரவி அல்லது சுரபி நாடு என்றும் (411, 413, 414 ஆம் எண்களைப்பார்க்கவும) வழங்கிய தாகத் தெரிகிறது.

2. இவ்வூர்க் கல்வெட்டுக்களில் 411ம் எண் கொண்ட கல்வெட்டு ஊரார் இந்தஊரைச்சேர்ந்த அழகப்பெருமாள விண்ணாக ரெம் பெருமானுக்கு குறிப்பிட்ட நிலங்களில் கடமை அந்தராயங களால் வந்த வருவாயை அளித்து நிலங்களின காரண்மைப்பயனை மட்டியூரில் ஒரு பெரு மருத்துவர்க்கு அளித்ததாகக் கூறுகின்றது. எனவே இக்கல்வெட்டொழிந்த ஏனையவை இவ்வூர் அகத்தீசுரம என்ற கோயிலைச்சார்ந்ததாகவும், இக்கல்வொட்டொன்றே பெருமாள கோயிலைச்சார்ந்தது எனவும் அறியக்கிடக்கின்றது.

3. இவ்வூர்த்திருவகத்தீசுரமுடையார் கோவிலில் விநாயகப் பிள்ளையாரின் படிமத்தை திருக்கோட்டியூர் வேட் கோவன் (குயவன்) திருமங்கையாழ்வான் திருமலை காவல் மூவேந்த வேளானும் திருக் கயக்குள திருவுடையான் அதிசய பாண்டிய பேரயனும் பராக்கிரம பாண்டியனின் ஆருவதின் எதிர் மூன்ருவது அதாவது ஒன்பதா ஆட்சியாண்டில் (ஏறக்குறைய பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியாகும்.) எறிசியருளப்பண்ணினர்கள் (எண் 413) இவ்வூரில் கிடைக்கும் கல்வெட்டுக்கட்டுக்களில் இதுவே பழமையானதாகும். இதற்கடுத்தபடியாக காலமுறையில் 408, 410, 418, 417, 409, 412, 416, 414, 415, 411 என்ற எண்களைக் கொண்ட கல்வெட்டுக்களை வரிசைப்படுத்தி வைக்கலாம். இவ்வரிசைக்கு எழுத்தமைதியும் ஓரளவு ஆதாரமாகும். 408-ம் எண்ணின் காலம் சோழுடு கொண்ட

சுந்தரபாண்டியனின் ஐந்தாவதின் எதிராம் ஆண்டாகிய கி. பி 1221-22 ஆகும். 410, 418, 417 — மூன்றும் ஆட்சியாண்டின அமைப்பை ஒட்டி அதாவது ஒற்றைப்பட்டையான ஆட்சி ஆண்டு 13 என்பதை அடியாகக்கொண்டு பதின்மூன்றின் எதிர் ஒன்று, எதிர் இரண்டு என்று மேல எண்ணிவரும் முறையை ஒட்டி கி. பி. 1237 இல் ஆண்ட சடையவர்மன் குலசேகரனின் கல்வெட்டுக் களாகக் கொள்ளத்தக்கன. எழுத்தமைதியால் 409, 412, 416, 414, 415 ஆகிய எண்கள் கொண்டவை இரண்டாவது மாறவர்மன் சுந்தர பாண்டியனின் (கி. பி. 1232-1249) கல்வெட்டுக்களாகக் கொள்ள லாம். 411, முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு என்பது தெளிவு. 'எம்மண்டலமுங்கொண்டருளிய' என்ற தொடர் அந்த முடிவை ணர்த்துதல் வெளிப்படை.

4. 418-ம் எண் கல்வெட்டை ஆராய்வோம். இக்கல்வெட்டில் வாளிலான் என்று புதிதாகக் கல்லிப் பெயரிடப்பட்ட ஒரு குடிக் காட்டை சோழநாட்டில் ஸ்ரீ பராந்தகச் சதுர்வேதி மங்கலத்தில் வாழ்ந்து வந்த கண்டேற்று யெச்ச (யஜுஸ்) நாராயணபட்டர் என்ற பார்ப்பனப்பெருமகனுக்குக் குத்தகைக்குக் கொடுத்து அக்குடிக் காட்டின் நிமித்தமாக வரும் கடமை அந்தராயம் என்ற இரண்டு வரிகளின் வருவாயை அகத்தீசுரமுடையார்க்கு கொடுத்ததாக வாளிலார் என்ற குழுவினரே தம்முள் இசைந்து அமைத்தாகப் புலப்படுகிறது. கண்டேறு என்பது ஆந்திர நாட்டில் கணடேறு வாடி என்று பெயர் பெற்ற ஒரு தலமாகும். வங்கிப்புறம், காரம்பீச் சேடு, துவேதை கோமபுறம என்ற வேறு தலங்களிலிருந்தும பண்டைக்காலங்களிலிருந்து பார்ப்பனப் பெருமக்கள தமிழ்நாட்டில் குடியேறி வந்திருக்கின்றார்கள என்பது செப்பேடுகளில் அனனார் பட்டியலை நோக்குவார்க்கு எளிதில் விளங்கும். குடிக்காட்டின் எல்லை காட்டிய விடத்து கிழக்கொழிந்த ஏனைய வெல்லைகளில் திருவாழிக்கல் சுட்டப்படுவதால் ஒருபுறம் மலையும் வேறுபுறங்களில் பெருமாள் கோயில் நிலங்களும் சூழ்ந்திருந்தன என்பது புலப்படும். இக்கல்வெட்டின் பொருளையே, மேலே இரண்டாவதாக மூலம் தரப்பட்ட 416-ம் எண் கல்வெட்டு சுட்டிக்காட்டுவது குறிப்பிடத் தக்கது.

5. முதலாவதாக முலம் தரப்பட்ட 418-ம் எண்ணை உடைய கல்வெட்டிற்கு திரு. மணவை. கா. மாான் அவர்கள் பொருள் விளக்கம் தந்திருககின்றார்கள். திரிபுனச்சக்கரவத்திகள் என்ற சொற்றொடர்கது சேர சோழ பாண்டியரின மூன்று நாடுகளையும் தன் ஆட்சிக்குள அடக்கிக்கொணடவர் என்று பொருள் கொள்ளப் படடது. இத்தொடா முதற்குலோத்துஙகள ஆண்ட காலத்திற்கு முன அருகியும அவன காலத்திலிநது பெருவாரியாகவும சோழ அரசர்களைத் தமிழ்க்கல்வெட்டுககள திரிபுனச்சக்கரவததிகள் என்ற அடைமொழியுடன் வைத்தக் குறிபபிடுகினறன. சோழரைப் பின் பறறிப்பாண்டியரும் இதடுதாடரைககையாண்டு வந்தனா். மற்ற குறுநில மன்னர்களாகிய காடவராயரும், சம்புவராயரும் முறையே சகல புவனச்சக்கரவத்திகள், சகல லோகச் சக்கரவத்திகள என்று தமமை அழைத்துக்கொண்டனர். சோழரையும் பாண்டியரையும ஆட்டிவைத்த ஹொய்சளசரில ஒரு சிலர் சார்வபௌமச்சககர வத்திகள் என்ற விருதுப்பெயர் தாங்கினார்கள் என்பதை அவர் தம் கல்வெட்டுக்களிற் கண்டு கொள்க. சேர பாண்டியரின் நாட்டை இழக்கத் தொடங்கிய காலத்தே கையாண்ட திரிபுவனச் சக்கர வத்திகள என்ற விருதுப்பெயர்க்கு மூன்றுநாடுகளையும் அடக்கிய பேரரசர் என்ற பொருள் சிறிதும் ஒவ்வாது உண்மையில் அவ்விரு நாடுகளையும் வென்று ஆண்ட பேரரசர்களாகிய முதலாம் இராச இராசனும் அவன் வழி வந்தவரும் இவ்விருதப்பெயரை மேற் சொள்ளவில்லை யென்னும் செய்தி இதனை வலியுறுத்தல் காண்க. மறற சொற்றொடர்களின் விளக்கங்களை மேற்பகுதிகளில் கண்டு கொள்க. இக்கல்வெட்டில் வரிப்பணத்தின் வருவாயைக் கோயி லுக்கு அளித்த செய்தி மேற்பகுதியில்உணர்த்தப்பட்டது. அவ்வரிப் பணம் தண்டிக்கொள்ளப்பட்ட விகிதம் வருமாறு: ஒரு மாறஞ்செய் நிலத்தில் கடமையாக ஐந்துகல நெல்லும் அந்தராயமாக ஒரு திரம முமகொளபபட்டன. ஒருமாநிலத்தில் குறுவைப்பயிருக்கு கடமை யாக இரண்டரைக்கல நெல்லும் அந்தராயமாக அரை திரமமும் தினை வரகு பயிருக்குக் கடமையாக ஒன்றேகால் கலமும் அந்தராயமாகக் கால் திரமமும் வரையறுக்கப்பட்டன. எள்ளுக்கு மாவுக்கு ஒரு திர

மம் கடமையாகவும் அந்தராயமாகவும் இறைப்பணம் இடப்பட்டது. எனவே இந்த விகிதத்தில் இக் கல்வெட்டில் எல்லை குறிக்கப்பட்ட நிலத்தில் வந்த இவ்வரிப் பணத்தின் வருவாயை அகத்தீசுவர முடையார்க்கு வாளிலார் பதித்து வைத்தார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

6. "நாராயண பட்டற்கு முன்பு குலசேகர தேவற்கு பதின்மூன்றாவது நாளிலே நமமடியார் வாளிலர்........கல்லி......" என்ற 426-ம் எண்ணில் இரண்டாவது மூன்றாவது வரிகளில் காணும் வாசகங்களால் நமமடியார் எனப்பட்ட வாலிலார் அக்கல்வெட்டில் கையொப்பமிட்ட துவராபதி வேளானுக்குத் தொண்டு செய்யும் அடியவர் என்பது வெளிப்படுகின்றது. இத் துவராபதி வேளாரின் முதலிகளில் ஒருவர் வாளிலாரைக்கொண்டு செய்வித்த நிலக்கொடையை 410-ம எண்ணில் காணக. 414, 415 எனற எண்களுடைய கல் வெட்டுக்களும சாமந்தனார் திருமேனிக்கு நன்றாக அதாவது அன்னாரின் உடல்நல உறுதிகுறித்து வழங்கப்பட்ட தன்ம தானங்களைத் தெரிவிக்கின்றன. 412-ம் எண்ணிலும் சொக்கநாயனார் அகம்படி முதலிகளில் ஒருவர் வழங்கிய கொடையைக் கூறுகின்றது. எனவே இவ் வாளிலார் எனப்படுவார் சாமந்தனார் நிலையிலுள்ள துவராபதி வேளான் என்ற பரம்பரை விருதுப் பெயர் படைத்த ஒரு தலைமகனின் அடியார் எனபதும் அன்னார் இருந்து வாழும் பகுதி ஒரு தனி ஊராக படைவீடு என்ற முறையில் (Canton ment) அமைக்கப்பட்டது என்பதும் தெள்ளிது. வாட்பாடை தாங்கியவர் வாழும் பகுதி (வாள் இல்) வாளில் என்றும் அன்னாருக்கு வாளிலார் என்றும் பெயா வழங்கப்பட்டிருக்கலாம்.

ஆகவே இதுகாறும் கூறியவாற்றால் சூழும் அரசர்கண்டன் ஆகிய திருச்சுனையில் இடைக்காலத்துப் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் வாளிலார் என்ற படைப் பகுதியினர் இருந்து தம் பணிகளோடு இறைவன் திருப்பணிகளுக்கு வேண்டியவற்றைச் செய்து வந்தனா என்பது புலனாகின்றது.

சிற்றிலக்கியம்.

கோவை

திரு. மது. ச. விமலானந்தம், எம். ஏ,
தமிழ் விரிவுரையாளர்,
சரபோசி மன்னர் கல்லூரி, தஞ்சாவூர்.

கோவை உறுப்பினர்கள்:

கோவை நூல்களிற் சிறப்பு உறுப்பினர்களாக ஒளிர்வோர் தலைவன். தலைவி, பாங்கன் பாங்கி, நற்றாய் செவிலி, தந்தை தனையர், அறிவர் சான்றோர், கண்டோர், ஏவலிளைஞர், வலவன, விருந்தினர், பக்கத்தார், முதலியோராவர், இதனைக் கண்ணுறுங்கால், காதலரிருவர் கூடிவாழும் வாழ்வக்குப் பல்லோர் துணை-பல்வேறு திறத்தினர் தம் துணை இன்றியமையாதது என்பதறியலாம்.

கோவைத் தலைவர் இருவர்:

கோவையில் பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் என இரு வேறு தலைவர்கள் பாடப் பெறுவர். பாட்டுடைத்தலைவன் வரவேண்டுமென்பன விதியுமில்லை, விலக்குமென்று, பாண்டிக் கோவை பாண்டியன் நெடுமாறனையும், தஞ்சை வாணன் கோவை சந்திரவாணனையும், குளத்தூர்க்கோவை வேதநாயகம் பிளளையையும், நாணிக் கண்புதைத்தற் கோவை தளவாய் ரகுநாத சேதுபதியையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டவை. அம்பிகாபதி கோவை பாட்டுடைத் தலைவனைப் பெறவில்லை. பாட்டுடைத் தலைவன் இல்லாத ஒரே ஒரு கோவை தமிழில் உண்டெனில் அஃது அம்பிகாபதி கோவையொன்றேயாகும். (இங்ஙனம் பாடப் பெருமைக்குக் காரணங்களாகப் பின்னவற்றைக் குறிக்கலாம்: தலைவன் ஒருவன உண்டெனில் அவனையும் அவனுக்குரிய நாடு, நகர், மலை, ஆறு, மாலை போன்ற அடையாளங்களை அடிக்கடி பாடல்தோறும் கூறவேண்டிய இன்றியமையாமை

கவிஞர்க்கு ஏற்படுகிறது. ஒரே பெயரை மீண்டும் மீண்டும் கூறுவதால் சுவைகுன்றுவ, கற்போர்க்குச் சோர்வை விளைவிக்கும். இவ்விரு இடர்பாடு இல்லாது போகும் பாட்டுடைத் தலைவனின்றிப் பாடினுல் அன்றியும் ஒருவரைச் சார்ந்து பாடாமையால் எந்நாட்டிற்கும், எக்காலத்திற்கும் ஏற்ற ஒன்ருகவும் அமைந்து விடுகிறது.

பாட்டுடைத் தலைவர்கள் கூறப் பெற்ருலும் அவர்களது மனைவியாரைப் பாட்டுடைத் தலைவியராக இணைத்துக் கூறல் இல்லை. ஆயினும் தலக்கோவைகளில் பாட்டுடைத் தலைவன் இறைவனுனமையான. இறைவனேடு இறைவியையும் பிணைத்துக் கூறல் உண்டு.

பாட்டுடைத் தலைவன் போன்றே கிளவித் தலைவனும் உண்டு' கிளவிச் தலைவனேடு கிளவித் தலைவியும், கூறப்பெறுவாள். ஆனல் பாட்டுடைத் தலைவன நாடு, நகர், பெயா முதலியன கூறப பெறுதல போல் கிளவித் தலைவனுடையதும் கூறப்பெறுதல் இல்லை.கிளவித் தலைவனுடையது கிளக்கப் பெறின், அக்கோவை அனைவர்க்கும் பொதுவெனல் ஆகாது,பெயர் குறித்தவனுக்கே ஆகிவிடும் இதனை'

மக்கள் நுதலிய அகனைந் திணையுஞ்

சுட்டி யொருவர் பெயர்கொளப் பெருர் (பொருள்-54)

எனும் தொல்காப்பிய பா கொண்டு தெளியலாம். கிளவித் தலைவன் துறைவன், நாடன் எனப் பொதுவாகவே கூறப்பெறுவர். பாட்டுடைத் தலை மக்கள் இல்வாழ்வைக் கிளவித் தலைமக்கள இல்வாழ்வோடு ஒப்பிட்டு உரைப்பதும், வேறுபடுத்திக் காட்டுவதும் (Comparison and Contrast) கூடாது, அகத்திணை மக்களின் பெயரையே கூறுதல் கூடாது எனும்போது, அம்மக்களைப் பெயருடையவர்களோடு இணைத்துக் கூறுதலும கூடாதனரே?

பிரிவும் கிளவியும்:

அகப் பொருள் வகையாகிய களவு, கற்பு எனும் இருபெருந் துறைகளின் விரிவாகிய கோவை இலக்கியா (1) கைக்கிளை (1),களவு (3)கற்பு எனும் முப்பெருர் பிரிவுகளையுடையது,கைக்கிளை தொடங்கி

பொருள் வயிற் பிரிவு ஈருக 33 கிளவிகளையுடையது. இனி சில கோவைகளில இப்பிரிவும் கிளவியும் மிக்கும், குறைந்தும், மாறுபட்டும் அமைதல் உண்டு. திருக்கோவையாரில் களவு கற்பு எனும் இரு பெரும் பிரிவில் இருபத்தைந்து கிளவிக் கொத்துக்கள் அடங்சக் காண்கிறோம். பாண்டிக் கோவை பதினெட்டு கிளவிகளைக் கொண்டதாகவே இதுபோது கிடைத்துளது. குலோத்துங்கன் கோவை, மாறன கோவை, திருவெங்கைக் கோவை மூன்றிலும் களவியல், கற்பியல், வரைவியல். என்றே மூன்று இயல்களும உள. தஞ்சைவாணன் கோவை களவியல்,வரைவியல், கற்பியல் என அமைகிறது

அம்பிகாபதிக் கோவையில் தலைவன் பாங்கற்கு இரங்கல், தலைமகனுக்கு அவன் நற்ருய் உரைத்தல், பதங்கம் பழிச்சல், யாணரைக் காண விரும்பல். என்பனவும், திருவாரூர்க் கோவையில் வளமபடவுரைத்தல், நற்ருய் தமருக்கு அறத்தொடு நிற்றல், கழையொடு புலம்பல், புறவொடு புலம்பல் என்பனவும் புதுத்துறைகளாக அமைகின்றன.

வேங்கை வினுதல், பன்றி வினுதல், மரைவினுதல் என்பன சிராமலை-திருவாவடுதுறை-கலைசை-திருக்கழுக்குன்றக் கோவைகளிலும், சிங்கம் வினுதல், கரடி வினுதல், முயல் வினுதல் என்பன மயூரகிரிக கோவையிலும் உள.

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைபாடு,பாங்கற் கூட்டம் எனும் முறை, திருக்கோவையாரில் இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம் இடந்தலைப்பாடு என்ற முறைப்பிறழ்வு உளது. 'வறிது நகை தோன்றல்' என்பது கவி கூற்ரும் ஆனல் .கலைசைக் கோவையிலும் மதுரைக் கோவையிலும தலைவன் கூற்ருகக் கூறப்பெறுகிறது.

பொருளும் முடிபும்:

தலைமக்கள் களவு தொடங்கிக் கற்பாகி மகப்பேறு எய்தி இன்பமாக இருக்கும் இல்லற வாழ்க்கையே கோவை நுதலும் பொருளாகும், கோவையின் முடிபு இங்ஙனமாக சிலவற்றில் மாறுபடவுள்ளன. பரத்தையிற் பிரிவு காரணமாக நேர்ந்த ஊடலைத் தீர்த்தத் தலைவன் தலைவியைக் கூடுவதாக அமைவது திருக்கோவையார், போர் மேற்

சென்று மீண்ட தலைவன் தலைவியோடு உடனிருந்து கார்ப்பருவங் கண்டு 'முகிலே! இனிப் பொழியத் தடையில்லை' என்றான் எனும் முடிபினது தஞ்சை வாணன் கோவை, ஓதற்குப் பிரிந்து சென்று மீண்ட தலைவன் மனைவியோடிருந்து இன்புற்று இறையடியை எண்ணுவதாக இயம்புவது மதுரைக் கோவை, பொருள்வயிற் பிரிந்த காதலன் காதலியை அடைந்து, கொண்டலை வேண்டுவதாகக் கலைசைக் கோவையும் திருவாவடுதுறைக் கோவையும் முடிகின்றன

கோவை, அகப் பொருட் கோவை யாதலின் இல்லறமாக முடிதலே முறை. துறவற முடிவு பொருந்துவதன்று. ஆனால் அம்பிகாபதி கோவை ஒன்று மட்டும்,

'இல்லறங் காதலித்துத் துறவறந் தாங்கல் இயைந்தனரே'

என முடிகிறது, இஃது ஏன் என அறியுமாறில்லை. அறிஞர் ஆய்ந்துணர்வார்களாக.

இன்னணம் கோவை நூல்களில் வேறுபாடும் மாறுபாடும் மிக்கிருப்பது கொண்டு கோவைப் புலவர்கள் இலக்கண நூல்கட்குத் தம்மை அடிமைப் படுத்தாது, தம் கற்பனைக்கும் கவித்திறத்திற்கும் ஏற்ப இடங்கொடுத்துள்ளனர் என்பதும், கோவைக்குக் கோவை மாற்றமிருப்பதால் ஒரு கோவை இன்னொரு கோவைக்கு முன்மாதிரியாகவோ-அடிச்சுவடாகவோ அமைய வில்லை என்பதும் தெளியலாம்.

கோவையின் தோற்றமும் வளர்ச்சியும்:

கோவை இலக்கியம் பிற்காலத்து தனி இலக்கியமாகக் காணல் பெறினும், இவற்றிற்கெல்லாம் ஊற்று நிலை சங்கப் பாடல்களே எனலாம், இன்னும் கூறின் சங்க காலந்தொட்டு சிறுகச் சிறுக வளர்ந்து இதுபோது கோவையாகவே உருப்பெற்றுள்ளது என உரைக்கலாம். அகநிகழ்ச்சிகளை வரன்முறைக்கு உட்படுத்தி வகுத்தும் தொகுத்தும் கூறும் முறை சங்க காலத்திலேயே தோன்றியுள்ளதெனலாம். அடுத்து அது குறிஞ்சிப் பாட்டால் வளர்நிலை பெற்றது. குறிஞ்சிப் பாட்டு 'அறத்தொடுநிலை' எனும் துறையின

தாகும், ஆதலின் இதனைச் 'சங்கத்தின் கோவைப் பாட்டு' என்பர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் ஐங்குறு நூற்றில் அம்மூவனார் கோவை முறையினை அடிகோலியிருப்பது அறியத்தக்கது.

மடல்பாடிய மாதங்கீரனார், 'வெறி' பாடிய காமக்கணியார், காலபணார் போன்றோர் முறையே மடற் துறை, வெறித் துறை, மகட் போககய தாய் வருந்தும் துறைபோன்ற ஒரு துறையினைப் பாடும் நிலையினர் என அறிகிறோம்; இஃது இடைக்கால ஒருதுறைக் கோவைக்கு உயிர்நாடியாக அமைகிறது.

ஆயினும் ஒருசில பாடல்களில—பாட்டிலும், தொகையிலும் பொதிந்து கிடந்த இப்போக்கினை, அறிந்து தெளிந்து அதனையே கோவை என ஓர் இலக்கிய வகையாக வடித்தெடுத்து வளர்த்த இடைக்காலப் புலவர்தம் புலமைத் திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது.

தொகையும், கோவையும்.

கோவை இலக்கியத்தைக் கூர்ந்து நோக்குழி, தொல்காப்பியம்-சங்கப் பாடல்கள் இவற்றில் காணப் பெறும் அகப்பொருள்கள் சாயல் அமையக் காணலாம், கோவை சங்க அகப் பொருள் சாரம் பிழிவு எனினும் அமையும். காட்டு சில கண்டு தெளிவாம்; அகத்திணைத் தலைவன் பெயர் இடபபெறாரன—என்பது இலம்சணம்; இது கோவையில பின்பற்றப்பட்டுள்ளது. உயிரினும சிறந்தன்று நாணே, நாணினும. செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று!— இனையும் கடைப்பிடித்துள்ளது கோவை. (பிற இடங்களில் வழுவினும், வெறியாட்டிலும், உடன் போக்கிலும், பரத்தையர் பிரிவிலும் கற்பு நெறிகளைக் கோவை சால்புடன செப்புகிறதெனலாம்) இனனும் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, கலித்தொகை. ஐங்குறு-நூறு, குறள, சிலப்பதிகாரம, மணிமேகலை ஆகியவற்றின் கருத்துக் கள் எலலாம கோவையில் கூறிவரல் காணகின்றோம. இதனைக் கணணுற்றுத்தானோ எனனவோ "கோவை சங்க இலக்கியங்களின பாவை" எனச் செபபுகினறனர் சான்றோர்.

சங்க அகச் சாயல் காணப்படினும், இரண்டிற்கும் வேறுபாடுண்டு. இரண்டும் அகத்தையே பாடினும், சங்க இலக்கியம் வாழ்வின் பிரதிபலிப்பு:- நேரடிப் படப்பிடிப்பு, கோவையோ வாழ்வின் ஓவியம். முன்னதில் உள்ளது உள்ளபடி உயர்ந்த முறையில் சித்ரிக்கப்பட்டிருக்கும், பின்னதில் இல்லதும் இணைந்திருக்கும் சங்கப்புலவர்கள் அகத்தைத் துறைகளாக்காது, சில பல கூறுகளைப பற்றித் தனித் தனிப் பாடல்களாக்கிச் சென்றனர். பிற்காலப் புலவர்களோ துறைகளாக வைத்துத் தொடர்ந்து கோவைபடப் பாடியுள்ளனர். அதனாற்றான் சங்க நூல்கள் 'தொகை' எனவும், பிற்கால நூல்கள் 'கோவை' எனவும் பெயர் பெறலாயின. முன்னதே வாழ்வுக்குப் பொருந்துவது-வாழ்வோடு ஒட்டியது, பின்னது அப்படிப் பட்டதன்று.

கோவைச் சிறப்பு:—

சங்க காலத்திற்குப் பின்னர் சால்புடை அகப்பொருள் இலக்கியமாகக் காணப்படுவன கோவை நூல்களே, கோவை இலக்கியம் சிற்றிலக்கியங்கள்யாவற்றினும் ஒருபேரிலக்கியமாப் பிறங்கி வருகிறது பிற்கால இலக்கியங்களுள் கோவை தன்னேரிலாத் தனி இலக்கியமாகப் பிறங்கி வருகிறது பிற்கால இலக்கியங்களுள் கோவை தன்னேரிலாத் தனி இலக்கியமாக இயங்கிவருகிறது. இதனைத் 'தொடர்நிலைச் செய்யுள்' அல்லது சிறுகாப்பியம்' எனச் செப்புவர் தண்டியாசிரியர்.

புலவனது 'சிந்தனைக் கோவையே கோவைச் சிற்றிலக்கியம் எனலாம், ஏனெனில் பாவலன் ஒருவன் ஒரு பொருளையே நீள நினைந்து, முழுச்சிந்தனையில் முகிழ்த்த திறத்தைச் கோவையில் காண்கிறோம்.

'பாவை பாடிய வாயரல் கோவை பாடுக' என இறையே விரும்பும் அளவிற்குக் கோவை சிறந்துளது. பேரின்பம நாடிய மணிவாசகரே பாடுதற்குரியதாயிற்று. பேரின்பக் குறிக்கோளுக்கு இச் சிற்றின்பம் கூறும் கோவையைப் பயன்படுத்தினர் என்றால் கோவையின் சிறப்பினைக் கூறவும் வேண்டுங் கொல்?

[தொடரும்)

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரு.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக் கலம்பகம்	—	0	6	0
13.	கல்லைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கணநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	8	0
4.	புலவராற்றுப்படை	—	0	8	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்க யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	—	0	8	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப் பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	8	0
21.	சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பக மூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக் கட்டளை	—	0	8	0
32.	மனீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
49.	கூடற்புராணம்	—	0	10	0
50.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
51.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
52.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
53.	பாப்பாவினம்	—	0	10	0
54.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
55.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
56.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
57	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
58.	கலைசைக்கோவை	—	0	12	0
59	பெருந்தொகை	—	5	0	0
60.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
61.	சிராமலைக்கோவை	—	0	12	0
62.	மத்யவியாயோகம்	—	0	2	0
63.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
64.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
65.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
66	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0
67.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் ''செந்தமிழ்'' இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.